**தலைப்பு – 271 திருகோணமலை மாவட்ட செயலகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

திருகோணமலை மாவட்ட செயலகம் - தலைப்பு 271 இன் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் திருகோணமலை மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளையும் அவதானிப்புக்களையும் உள்ளடக்கிய பொழிப்பறிக்கை 2023 மே 31 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகம் தொடர்பான விரிவான வருடாந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 மே 30 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திருகோணமலை மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்கவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் என்பன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயன்முன்னேற்றம் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக பேணுவதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாவட்ட செயலகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரிற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை

| முன்னைய ஆண்டு அறிக்கையின் பந்திகளுக்கான தொடர்பு | அமுல்ப்படுத்தப்படாத பரிந்துரைகள் | இந்த அறிக்கையில் பந்தி தொடர்பு |
|---|---|---|
| 1.4.1.2 (அ) | செலவின விடயக் குறியீடு சரியாகக் கண்டறியப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 1.6.1 (அ)(i) |
| 1.4.1.3 (அ) | செலவின விடயக் குறியீடு சரியாகக் கண்டறியப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 1.6.1 (அ)(ii) |
| 1.4.1.3 (ஆ) | செலவின விடயக் குறியீடு சரியாகக் கண்டறியப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 1.6.1 (ஆ) |

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

### (அ) மீண்டெழும் செலவினம்

நிதிக்கூற்றுக்களுடன் தொடர்புடைய மீண்டெழும் செலவினங்களிற்கான கணக்கீட்டின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | பாதுகாப்பு சேவைக்காக மாவட்ட செயலகத்தால் செலுத்தப்பட்ட ரூபா 10,245,429 தொகை மற்றும் துப்பரவு சேவைக்காக மாவட்ட செயலகத்தால் செலுத்தப்பட்ட ரூபா 353,091 தொகை என்பன ஏனைய சேவை செலவின | மாவட்டச் செயலகத்தின் துப்பரவுச் செலவினங்களை மதிப்பிடும் போது இது செலவின விடயக் குறியீடு 271-1-1-0-1303 இன் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது, மேலும் அதே செலவின விடயக் குறியீட்டிற்கு ஒதுக்கீடும் | செலவின விடயக் குறியீடு சரியாகக் கண்டறியப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விடயக் குறியீடு 271-1-2-0-1409 இன் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்காது முறையே ஏனைய படிகள் செலவின விடயக் குறியீடு 271-1-1-0-1003 மற்றும் கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புக்களின் பராமரிப்பு செலவின விடயக் குறியீடு 271-1-1-0-1303 என்பவற்றின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. மாவட்ட செயலகத்தின் ஏனைய படிகளில் மேலதிகமாக செலவிடப்படும் அபாயத்தை தடுக்கும் வகையில் இது கணக்கீடு செய்யப்பட்டமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | பெறப்பட்டுள்ளது. தொடர்புடைய செலவினங்கள் ஏற்பட்ட பின்னர் செலவினங்கள் அதே செலவின விடயக் குறியீட்டில் கணக்கீடு செய்யப்படும். கணக்காய்வில் காட்டப்பட்டுள்ளவாறு பொருத்தமற்றதாக இருந்தால், அடுத்த ஆண்டுக்கான மதிப்பீடுகளைத் தயாரிக்கும் போது இது சீர்செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். | |
| (ii) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மாவட்டச் செயலகத்திற்கு சொந்தமில்லாத வாகனங்களை பழுதுபார்ப்பதற்காக மாவட்டச் செயலகம் மற்றும் வெருகல் பிரதேச செயலகம் ஆகியன செலவிட்ட ரூபா 1,033,412 தொகை முறையே வாகன பராமரிப்பு செலவின விடயக் குறியீடுகள் 271-1-1-0-1301 மற்றும் 271-1-2-0-1301 ஆகியவற்றின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் விளைவாக, வாகன பராமரிப்பு கிரயங்கள் அந்தத் தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டன. | 2022 ஆம் ஆண்டில் இறுக்கமான பாதீட்டு சூழல் காரணமாக, இந்த அலுவலகம் குறித்த சில செலவினங்களைக் குறைப்பதற்கு அறிவுறுத்தப்பட்டது. ஆனால் பழுதுபார்க்கப்பட வேண்டியதன் அவசியம் காரணமாக பராமரிப்புச் செலவினங்களின் கீழ் பழுதுபார்ப்புச் செலவினங்கள் ஏற்பட்டன. | செலவின விடயக் குறியீடு சரியாகக் கண்டறியப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (iii) | திருகோணமலை மாவட்ட செயலகத்திற்கு ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களால் செலவிடப்பட்ட ரூபா 1,168,488,299 செலவினம் காசுபபாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. எனவே, மீளாய்வாண்டின் போது தேறிய செயற்பாட்டு காசுப்பாய்ச்சல் அந்தத் தொகையால் அதிகரித்து மதிப்பிடப்பட்டது. | இந்த விடயத்திற்கு புதிதாக இருந்த உத்தியோகத்தரால் காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 1,168,488,229 செலவினத் தொகை சேர்க்கப்பட்டிருக்கவில்லை. | வியத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் இறுதிக் கணக்குகளுக்குப் பொறுப்பாவார்கள். |

### (ஆ) மூலதனச் செலவினம்

நிதிக்கூற்றுக்களுடன் தொடர்புடைய மூலதனச் செலவினங்களிற்கான கணக்கீட்டின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| CCTV கமரா முறைமையை பொருத்துவதற்காக பட்டினமும் சூழலும் பிரதேச செயலகத்தினால் செலுத்தப்பட்ட ரூபா 300,000 தொகையும், புதிய துப்பரவு கட்டிடம் (new sanitation building) அமைப்பதற்காக குச்சவெளி பிரதேச செயலகத்தினால் செலுத்தப்பட்ட ரூபா 1,000,000 தொகையும் முறையே இயந்திரங்கள் மற்றும் இயந்திரங்களின் மூலதன சொத்துக்களை சுவீகரித்தல் தொடர்பான செலவின விடய இலக்கம் 271-1-2-0-2103 மற்றும் கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்களில் மூலதன சொத்துக்களை சுவீகரித்தல் தொடர்பான செலவின விடயக் குறியீடு 271-1-2-0-2104 ஆகியவற்றின் கீழ் கணக்கீடு செய்யப்படாமல் இயந்திரங்கள் மற்றும் இயந்திரங்களின் மூலதன சொத்துக்களை புனரமைத்து மேம்படுத்துதல் தொடர்பான செலவின விடய இலக்கம் 271-1-1-0-2001 இன் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதன் விளைவாக, மூலதனச் சொத்து புனரமைப்பு மற்றும் மேம்படுத்துதல் செலவினங்கள் அந்தத் தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டன. மேலும் அந்த சொத்துக்கள் நிதியல்லாத சொத்துகளின் கீழும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | CCTV கமரா முறைமையை நிறுவுவது தொடர்பான செலவினங்கள் கணக்கீட்டின் போது தவறாகக் கணக்கீடு செய்யப்பட்டுள்ளன. இது தொடர்பில் மாவட்ட செயலகம் மற்றும் பட்டினமும் சூழலும் பிரதேச செயலக அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டதுடன் குச்சவெளி பிரதேச செயலகத்தில் துப்பரவு கட்டிட நிர்மாணத்திற்கான செலவினங்கள் தவறாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இதுபோன்ற பிரச்சனைகள் ஏற்படாது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். | செலவின விடயக் குறியீடு சரியாகக் கண்டறியப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### (இ) பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்துதல்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2022 ஆம் ஆண்டு சேருவில பிரதேச செயலகத்தில் சேவை வழங்கப்பட்ட போதிலும் செலுத்தப்படாத செலவினங்கள் தொடர்பான பொறுப்புக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரீட்சிப்பின் பிரகாரம் 2023 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,488,305 செலவினத் தொகை 2022 ஆம் ஆண்டில் மாவட்டச் செயலகத்தின் நிதிக்கூற்றுக்களில் உள்ள கடப்பாடுகள் மற்றும் | 2022 நிதிக்கூற்றை தயாரிக்கும் போது தொடர்புடைய கடப்பாடு எங்களுக்கு தெரிவிக்கப்படாததால் அது கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை என்பதையும் அது தற்போது சீர்செய்யப்பட்டு நாளதுவரையாக்கப்பட்டுள்ளது | நிதிக்கூற்றுக்களில் சரியான தகவல்கள் வழங்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பொறுப்புக்கள் கூற்றின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. | என்பதையும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம். | |
| (ii) | திறைசேரி அச்சீட்டுத்தாளின் (SA 90) பிரகாரம் பொறுப்பு ஒதுக்கங்களின் ஆரம்ப மீதி ரூபா 1,568,436,365 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டில் தேறிய பொறுப்புக்கள் ரூபா 2,361,972,444 தொகையாக இருந்ததன் காரணமாக பொறுப்பு ஒதுக்கங்களின் இறுதி மீதி ரூபா 3,930,408,809 ஆக இருந்தது. எனினும் மீளாய்வாண்டிற்கான தேறிய பொறுப்புக்களின் தொகை SA 92 படிவத்தில் ரூபா 334,016 ஆக மாத்திரமே குறிப்பிடப்பட்டுள்ளதுடன் 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பின்னிணைப்பு iii இல் முழுமையாகக் காட்டப்படவில்லை. | கிண்ணியா பிரதேச செயலகம் புதிய சிகாஸ் இணைய இடைமுகத்தில் பொறுப்பு அறிக்கையை நாளதுவரையாக்கியிருக்கவில்லை. மேலும் உத்தியோகத்தரால் கைமுறையாக தயாரிக்கப்பட்ட பொறுப்பு அறிக்கையின் பிரகாரம் செலவினத் தலைப்பு 271 இன் கீழ் எந்த பொறுப்புக்களும் காட்டப்படாததால் இந்த வேறுபாடு ஏற்பட்டுள்ளது. | மீளாய்வாண்டின் இறுதி வரை நாளதுவரையாக்கப் பட்ட தகவல்கள் இறுதிக் கணக்குகளில் சேர்க்கப்பட வேண்டும். |

**(ஈ) கட்டுநிதி மீதி**

கட்டுநிதி மீதிக்கான கணக்கீட்டின் போது பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | கட்டுநிதிப் பொழிப்பின் (SA 70) பிரகாரம் ரூபா 42,182,404 தொகை இறுதி மீதியாக காட்டப்பட்டது, ஆனால் 2022 ஆம் ஆண்டின் இறுதி கட்டுநிதித் தீர்ப்பனவு ரூபா 42,177,179 ஆகும். அதன் பிரகாரம் ACA 3 இன் பிரகாரம் ரூபா 5,225 வேறுபாடு காணப்பட்டது. | கட:டுநிதி பொழிப்பின் (SA 70) பிரகாரம் ரூபா 42,182,404 தொகை இறுதி மீதியாக காட்டப்பட்டிருந்த போதிலும் 2022 ஆம் ஆண்டின் இறுதி கட்டுநிதி தீர்ப்பனவு ரூபா 42,177,179 ஆகும். அதன் பிரகாரம், ACA 3 இன் பிரகாரம் ரூபா 5,225 வேறுபாடு காணப்பட்டது. | நிதிக்கூற்றுக்களில் உள்ள தகவல்கள் சரியாக வழங்கப்பட வேண்டும். |
| (ii) | திறைசேரி அச்சீட்டுத்தாளின் பிரகாரம் SA 21 இன் படி கட்டுநிதி பெறுவனவுகள் ரூபா 2,311,949,476 ஆக இருந்த போதிலும் கட்டுநிதிக் கூற்றின் (ACA 3) பிரகாரம் பெறுவனவுகள் ரூபா 2,324,514,983 ஆக இருந்ததால் இரண்டு தொகைகளுக்கும் இடையில் ரூபா 12,565,507 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | இங்கே சரியான வேறுபாடு ரூபா 29,616,897 ஆக இருக்க வேண்டும். SA 21 (ரூபா 2,354,131,880.88) மற்றும் ACA 3 இன் ரூபா 2,324,514,983.49 என்பவற்றிற்கிடையே உள்ள முரண்பாட்டின் காரணமாக இந்த வேறுபாடு காணப்படுகிறது. | நிதிக்கூற்றுக்களில் உள்ள தகவல்கள் சரியாக வழங்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | கட்டுநிதிக் கூற்றின் பிரகாரம் ஏனைய வளமூலங்களில் இருந்து பெறப்பட்ட கட்டுநிதி ரூபா 413,035,983 ஆக பதிவு செய்யப்பட்டுள்ள போதிலும் திறைசேரி அச்சீட்டுத்தாளில் ரூபா 442,652,880 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளதால் அந்த உருப்படிகளின் கீழ் ரூபா 29,616,897 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | 2022 ஆம் ஆண்டுக்கான ஏனைய வளமூலங்களில் இருந்து பெறப்பட்ட உண்மையான கட்டுநிதி ரூபா 442,652,880 ஆகும், ஆனால் கட்டுநிதிக் கூற்று ரூபா 413,035,983.49 ஆக தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் உள்ள தகவல்கள் சரியாக வழங்கப்பட வேண்டும். |

**(உ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

திருகோணமலை மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் பின்வருமாறு சில ஆவணங்களை பேணியிருக்காதமையும் சில ஆவணங்களை முறையாக நாளதுவரையாக்கியிருக்காதமையும் தெரிவுக் கணக்காய்வுகளின் போது அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்பு | | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (i) | **ஆவணத்தின் வகை** | **தொடர்புடைய பிரமாணம்** | **அவதானிப்பு** | | |
| | **சரக்கிருப்பு பதிவேடு**<br>சேருவில, கந்தளாய் மற்றும் மொறவெவ பிரதேச செயலகங்கள் | நிதிப் பிரமாணம் 763 | நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை | இவ் விடயம் புதிய உத்தியோகத்தரிற்கு மாற்றம் செய்யப்பட்டிருந்த போது நாளதுவரையாக்குவதில் சிறிது தாமதம் ஏற்பட்டுள்ளது. அதை சரியாக செய்வதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | உத்தியோகத்தர்கள் மீண்டும் முறையான பயிற்சிக்குப் பின்னர் இவ் விடயத்திற்கு உள்வாங்கப்பட வேண்டும். |
| (ii) | **ஆவணத்தின் வகை** | **தொடர்புடைய பிரமாணம்** | **அவதானிப்பு** | | |
| | **பிணைப் பதிவேடு**<br>மாவட்ட செயலகம் மற்றும் 11 பிரதேச செயலகங்கள் | நிதிப் பிரமாணம் 891(1) | பேணப்பட்டிருக்கவில்லை | பிணைப் பதிவேட்டை நாளதுவரையாக்குவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் 891(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகளைத் தயாரித்தல், ஒதுக்கீடுகளை மாற்றுதல், குறைநிரப்பு பாதீட்டு மதிப்பீடுகள் மூலமான ஒதுக்கீடுகளின் பெறுவனவுகள் மற்றும் பயன்பாடு மற்றும் சேமிப்பு தொடர்பாக பின்வரும் கணக்காய்வு அவதானிப்புக்கள் வெளிப்படுத்தப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலகம் 7 மீண்டெழும் செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 44,600,000 ஒதுக்கீட்டிலிருந்து நிதிப்பிரமாணம் 66/69 மாற்றங்களின் கீழ் ரூபா 9,250,000 தொகையை மாற்றியிருந்தது. அதற்குப் பின்னரும் ரூபா 7,883,036 நிதியேற்பாடு சேமிக்கப்பட்டதால், ரூபா 17,133,036 மேலதிக நிதியேற்பாடு மதிப்பிடப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை, அலுவலகங்கள் மூடப்படுதல், நிர்வாக நடவடிக்கைகளின் குறைப்பு மற்றும் பல செயற்திட்டங்களின் இடைநிறுத்தம் ஆகிய காரணங்களால் நிதியேற்பாடுகள் சேமிக்கப்பட்டன. | நிதியேற்பாடுகள் சரியாக திட்டமிடப்பட வேண்டும். |

### 2.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளின் பயன்பாடு

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **ஆடு வளர்ப்பு செயற்திட்டம் - 2022** | | |
| (i) பின்தங்கிய கிராமப்புறங்களில் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக விவசாய அமைச்சின் கிராமிய பொருளாதார பயிர்களின் பயிர்ச்செய்கை மற்றும் ஊக்குவிப்பு பிரிவினால் அமுல்ப்படுத்தப்பட்ட செயற்திட்டத்தின் கீழ் 2 வயதுக்கு மேற்பட்ட 35 ஆடுகள், 1½ வயதுக்குட்பட்ட 71 ஆடுகள், பரிந்துரைக்கப்பட்ட நிறைக்கு மேற்பட்ட 12 ஆடுகள், குறைந்தபட்ச நிறையை விட குறைவான நிறையுள்ள 49 ஆடுகள் என தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் | 1 வயதுக்கு மேற்பட்ட 12 ஆடுகளும், 2.5 முதல் 3.00 கிலோகிராம் நிறையுள்ள 16 ஆடுகளும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. வயதான விலங்குகள் கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை. கருவுற்றிருப்பதன் மூலம் பயனாளிகளுக்கு கூடுதல் இலாபம் கிடைப்பதாலும், கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்கள பணிப்பாளரின் பரிந்துரையின் அடிப்படையிலும் இந்த ஆடுகள் கையகப்படுத்தப்பட்டுள்ளன. | 2022 ஆகஸ்ட் 26 ஆம் திகதிய மாவட்டச் செயலக தொழில்நுட்பக் குழு அறிக்கையின் பிரகாரம் பெறுகை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பரிந்துரைகளுக்கு முரணாக கொள்வனவு செய்யப்பட்டுள்ளதால் இச் செயற்திட்டம் விலங்குகளை ஊக்குவித்தல் மற்றும் குறைந்த வருமானம் பெறுபவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் ஆகிய நோக்கங்களை அடைந்திருக்கவில்லை. | | |
| (ii) | மாவட்ட செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளரின் 2022 நவம்பர் 12 ஆம் திகதிய ஜீஏரீ/பிஎல்ஏ/ஜீஆர்பி/டிஓ.09/2022 ஆம் இலக்க கடிதத்தில் இந்த செயற்திட்டம் தொடர்பாக பயனாளிகளிடமிருந்து பணம் எதுவும் தேவையில்லை என்று குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், கோமரன்கடவல, மொறவெவ மற்றும் சேருவில பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த 104 பயனாளிகள் தொடர்பாக ரூபா 417,845 தொகை பயனாளிகளிடம் இருந்து சேகரிக்கப்பட்டுள்ளது. | பரிந்துரைக்கப்பட்ட அளவுகோல்களின் பிரகாரம் தேவையான கால்நடைகளை கொள்வனவு செய்வதில் தொடர்ந்து சிரமம் இருப்பதாலும், கிடைக்கக்கூடிய சில கால்நடைகளுக்கு மேலதிக கிரயங்களை மேற்கொள்ள வேண்டியிருந்ததாலும், பயனாளிகள் அந்த கிரயங்களை செலுத்துவதற்கு எழுத்துமூலம் இணங்கியதாலும், செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதை விரைவுபடுத்துமாறு கோரியதாலும் இந்த வழியில் அமுல்ப்படுத்தப்பட்டது. | ஜீஏரீ/பிஎல்ஏ/ஜீஆர்பி/டிஓ.09/2022 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.3 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் சான்றுபடுத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தில் உள்ள நிதிக் கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் அம் முறைமையினை செயற்றிறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். மேலும் அம்மீளாய்வுகள் எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று | மாவட்டச் செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணப்பட்டு வருகின்றதுடன், அங்கு மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் தாமதம் காரணமாக உரிய விபரங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. உடனடி நடவடிக்கை எடுக்கப்படும். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததை உறுதிப்படுத்தும் கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வு சோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | அவதானிப்புக்கள் | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | | |
| | | ரூபா | | | |
| (i) | 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய 09/2009 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 2 (iv) ஆம் பிரிவு | 1,370,455 | மேலதிக நேர மற்றும் விடுமுறை நாட்களுக்கான கொடுப்பனவுகளை கைவிரல் அடையாள இயந்திரங்கள் மூலம் சரிபார்ப்பது இன்றியமையாததாக இருந்த போதிலும் மாவட்ட செயலகம், மொறவெவ பிரதேச செயலகம் மற்றும் தம்பலகமுவ பிரதேச செயலக அதிகாரிகள் அவ்வாறு செய்யாது மீளாய்வாண்டில் மேலதிக நேர மற்றும் விடுமுறைக் கொடுப்பனவுகளைப் பெற்றுள்ளனர். | மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகத்தில் கைவிரல் அடையாள இயந்திரங்கள் பழுதடைந்தமையினால் வருகைப் பதிவேடு உரிய பதவிநிலை உத்தியோகத்தரினால் சான்றுபடுத்தப்பட்டு மேலதிக நேரப் படிகள் மற்றும் விடுமுறை கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டுள்ளன. | 09/2009 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 2 (iv) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 371(2)(ஆ) | 6,000,000 | 2022 செப்தெம்பர் 13 இல் பட்டினமும் சூழலும் பிரதேச செயலகம் நெல் கொள்வனவுகளுக்காக மாவட்ட செயலகத்திற்கு செயல்நிமித்த கட்டுநிதியாக செலுத்தியிருந்தது. | மாவட்ட செயலக முகாமைத்துவ குழுவில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் திறைசேரியுடனான உடன்படிக்கையில் முற்பணம் எடுக்கப்பட்டுள்ளது. தொடர்புடைய தொகை தற்போது முழுமையாக தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் 371(2)(ஆ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 2018 சனவரி 29 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க கணக்கீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் பிரதேச செயலகம் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகளுக்கு முன்னுரிமை அளித்து 5 முக்கிய சேவைகள் தொடர்பாக உகந்த இலக்குகளை நிர்ணயித்து அந்த இலக்குகள் பற்றிய அறிக்கையை மாவட்ட செயலகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். குறித்த சுற்றறிக்கையின் 2.5 மற்றும் 2.6 ஆம் பந்திகளுக்கு இணங்க அனைத்து பிரதேச செயலகங்களின் உகந்த இலக்குகளை தொகுத்து மாவட்ட செயலகம் அறிக்கையொன்றை ஒவ்வொரு வருடமும் சனவரி 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதிகளுடன் உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் பிரதேச செயலகம் மற்றும் மாவட்ட செயலகம் 2022 ஆம் ஆண்டு தொடர்பான அறிக்கைகளை சமர்ப்பித்திருக்கவில்லை. | பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகளுக்கான உகந்த இலக்குகளை பிரதேச செயலகங்கள் நிர்ணயித்து அந்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கான அறிக்கைகளை மாவட்ட செயலகத்திற்கு அனுப்பிவைத்துள்ள போதிலும் அனைத்து பிரதேச செயலகங்களின் இலக்குகளை தொகுத்து அறிக்கையொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதிகளுடன் உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை என்பதை தெரிவிக்க விரும்புகிறேன். விரைவில் அதை அனுப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 2018 சனவரி 29 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க கணக்கீட்டு சுற்றறிக்கையின் 2.5 மற்றும் 2.6 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 திசெம்பர் 15 ஆம் திகதிய நிதி அமைச்சின் செயலாளரின் எம்எவ்/என்பிடி/02/2021 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவுக்கு முரணாக பிரதேச செயலாளரின் கையொப்பத்துடன் மாவட்ட செயலகத்திற்கு | மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டங்களில் இந்த செயற்திட்டங்களுக்கு மாவட்டச் செயலாளரின் முன் அங்கீகாரம் வழங்கப்பட்டது. மாவட்டச் செயலாளருக்கு அனுப்பப்பட்ட சில ஆவணங்களின் திகதிகளுக்கும், செயற்திட்டங்களை | மாவட்டத்தில் அமுல்ப்படுத்தப்படும் அனைத்து செயற்திட்டங்களும் மாவட்ட செயலாளரின் அங்கீகாரத்தைப் பெற்று அமுல்ப்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| அனுப்பப்பட்ட அபிவிருத்தி முன்மொழிவுகள் செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்கான ஒப்பந்தங்கள் பிரதேச செயலகத்தினால் கைச்சாத்திடப்பட்ட திகதியின் பின்னர் அங்கீகரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | அமுல்ப்படுத்துவதற்கான உடன்படிக்கைகளின் திகதிகளுக்கும் இடையே முரண்பாடு இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. | |

## 3.2 தொழிற்பாடுகளில் முன்னேற்றமின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 09 ஆம் திகதிய பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான சனாதிபதி செயலணியில் பிரதமரின் மேலதிக செயலாளரின் பிரீஎவ்/01/1பீபி/2022/ஆர்டிபி ஆம் இலக்க கடிதத்தின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் அடுத்த ஆண்டில் விவசாயம், கால்நடைகள், மீன்பிடி மற்றும் பெருந்தோட்டம் ஆகிய துறைகளில் உள்ள செயற்திட்ட உள்ளீடுகளிற்கான அதிக தேவை காணப்படும் போதிலும் அவற்றை வழங்குவதற்கான திறனை சம்பந்தப்பட்ட நிறுவனங்கள்/ அமைச்சுக்களில் இருந்து உறுதி செய்யப்பட்டு, செயற்திட்டங்களின் எண்ணிக்கை மற்றும் செயற்திட்டத்தின் திறன் என்பன தீர்மானிக்கப்பட வேண்டும். வாழ்வாதார அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் சேருவில பிரதேச செயலகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட ரூபா 3 மில்லியன் நிகழ்ச்சித்திட்டத்தில் கால்நடை வளர்ப்பு தொடர்பில் 75 பயனாளிகளுக்கு ரூபா 7,110,000 மொத்த பெறுமதியுடன் கூடிய செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்படவில்லை. | கால்நடை வளர்ப்பு செயற்திட்டங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு உரிய செயற்திட்டத்தின் பிரகாரம் கால்நடைகளை வழங்குவதற்கு மாவட்ட செயலகத்திலிருந்து விலை கோரப்பட்ட போதிலும் விலை கிடைக்காத காரணத்தினால் கால்நடைகளை வழங்க முடியவில்லை என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். | செயற்திட்டம் தொடர்பான சுற்றறிக்கைகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.3 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடைந்துகொள்ளப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சேருவில பிரதேச செயலகத்திற்குட்பட்ட "கம சமக பிலிசந்தரக்" நிகழ்ச்சித்த்திட்டத்தில் சோமபுர ஆரம்ப பாடசாலையின் கூரையை புனரமைப்பது தொடர்பாக 2022 ஒக்தோபர் 06 ஆம் திகதி நடாத்தப்பட்ட கள பரீட்சிப்பின் போது மேற்கூரைக்கு பயன்படுத்தப்பட்ட 6 அடி கூரைத்தகடுகள் 2 இடங்களில் வெளியே வந்திருந்தது, அதனால் தற்காலிக மேல் ஓடுகள் பயன்படுத்தப்பட்டது. மேற்கூரை புனரமைக்கப்பட்டு ஒரு மாத காலம் கடப்பதற்கு முன்னரே மேற்கூரை இடிந்து விழுந்திருந்த போதிலும், கணக்காய்வு திகதி வரையிலும் கட்டிடம் பூர்த்தி செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்டு 7 மாதங்கள் ஆகியும், குறைபாடுகள் சீர்செய்யப்பட்டிருக்கவில்லை.<br>இதனால், தொடக்கப் பிரிவில் சுமார் 75 மாணவ, மாணவிகள் படிக்கும் தொடக்கக் கட்டிடம், மழையின் போது நனைந்து, மேற்கூரை ஓடுகள் வகுப்பறைக்குள் விழும் நிலையில் பாதுகாப்பற்ற நிலையில் இருந்தது. | சம்பந்தப்பட்ட கட்டிடத்தின் மேல் பகுதியில் கூரைத்தகடுகள் காணாமல் போயுள்ளதென சேருவில மாவட்ட செயலகத்திற்கு அதிபர் தெரிவிக்கவில்லை. இதனை சரிபார்த்த பின்னர் கட்டணம் செலுத்தும் முன் அதனை சீர்செய்யுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. | செயற்திட்டப் பணிகளை விரும்பிய அளவில் அடைந்துகொள்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | போரினால் இடம்பெயர்ந்த மக்களுக்கு நிரந்தர வீடுகளை அமைப்பதற்கான நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தொழிற்பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளரின் 2019 சனவரி 12 ஆம் திகதிய பிஎச்/என்ஈசீஏ/2019-1 ஆம் இலக்க கடிதத்தின் 4.4 ஆம் பிரிவின் பிரகாரம் குச்சவெளி பிரதேச செயலகம் 05 வீடுகளை நிர்மாணிப்பதற்காக ஐந்து பயனாளிகளின் வங்கிக் | செயற்திட்டத்துடன் தொடர்புடைய இறுதிக் கொடுப்பனவு 2021 திசெம்பரில் பயனாளிகளின் சமுர்த்தி வங்கிக் கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ளது. பயனாளிகளின் ஒவ்வொரு வேலையும் பூர்த்தியடைந்ததை உறுதிசெய்த பின்னர் அடுத்த கொடுப்பனவுகள் சமுர்த்தி வங்கியில் இருந்து வைப்புச் செய்யப்படுகிறது. வேலை பூர்த்தியடைந்தமை தொடர்பாக கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் மூலம் கொடுப்பனவுகள் | செயற்திட்டத்தை விரைவாக பூர்த்தி செய்வதற்கு பயனாளிகளுக்கு ஊக்கமளித்து, உரிய நிதிகள் விரைவாக விடுவிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| கணக்குகளுக்கு ரூபா 4.98 மில்லியன் தொகையை விடுவித்துள்ளது. வீடுகளை நிர்மாணிப்பதற்காக நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டு 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் பயனாளிகளின் வீடுகளை முழுமையாக நிர்மாணிக்காமல் குடியிருப்பதற்கு தகுதியற்ற நிலையில் உள்ளது. | விடுவிக்கப்படுகின்றன. பயனாளிகளின் பணிகளை பூர்த்திசெய்வதில் உள்ள காலதாமதம் காரணமாக இறுதிக் கொடுப்பனவுக்கான பணம் வங்கிகளில் தேங்கியுள்ளது. | |

### 3.4 எதிர்பார்க்கப்பட்ட விளைவு (Outcome) அடைந்துகொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள முனைச்சேனை கிராம சேவையாளர் பகுதியில் குட்டுஸ் அதிபர் வீதி மற்றும் அதன் வடிகால் அமைப்பை நிர்மாணிப்பதற்காக முறையே ரூபா 3 மில்லியன் மற்றும் ரூபா 4 மில்லியன் செயற்திட்ட முன்மொழிவுகளின் கீழ் ரூபா 1.6 மில்லியன் கூட்டுமொத்த ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டது. மேலும் 2022 மார்ச் 30 இல் ஒப்பந்ததாரர்களுக்கு ரூபா 1,386,000 தொகை செலுத்தப்பட்டு செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டது. ஆனால் கணக்காய்வு களப் பரீட்சிப்பின் போது இந்த வடிகால் அமைப்பில் தண்ணீர் தேங்கி இருப்பதும், வாய்க்கால்களுக்கு பின்னால் மணல் அள்ளாததால், குழிகள் உருவாகி, முறையற்றவாறு பூர்த்தி செய்யப்பட்டிருப்பதும் கண்டறியப்பட்டது. | இந்த செயற்திட்டம் மழை காலத்தில் பூர்த்தி செய்யப்பட்டது. பின்னர் உரிய நிரப்புதல்கள் செய்யப்பட்டு தண்ணீர் தேங்குதல்கள் தவிர்க்கப்பட்டது. வடிகால் முடிவில் தனியார் காணி இருப்பதால் ஏதேனும் பிரச்சனை ஏற்பட்டாலும், இறுதிக் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு முன்னர் குறைபாடுகளை சீர்செய்வதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | செயற்திட்டங்களின் ஒதுக்கீடுகள் சிறந்த முறையில் பயன்படுத்தப்பட வேண்டும். |

## 3.5 பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கிராமிய வீதிகள் மற்றும் உட்கட்டமைப்பு திட்டம் - 2021 இன் கீழ் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளரின் 2021 ஒக்தோபர் 18 ஆம் திகதிய எஸ்எம்ஆர்ஆர்/பிஎல்/01/சீஜஆர்/ ஏஎம் ஆம் இலக்க கடிதம் மற்றும் 2021 நவம்பர் 22 ஆம் திகதிய மேலதிக உட்கட்டமைப்பு அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளரின் கடிதம் ஆகியவற்றின் பிரகாரம் அனைத்து கிராமப்புற வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களும் 2021 திசெம்பர் 15 இற்கு முன்னர் பூர்த்திசெய்யப்பட வேண்டும். கிண்ணியா பிரதேச செயலகமானது சம்பந்தப்பட்ட செயற்திட்டத்தின் கீழ் 17 வீதி நிர்மாண செயற்திட்டங்களுக்காக மொத்தமாக ரூபா 26 மில்லியன் தொகையை ஒதுக்கியிருந்ததுடன், ரூபா 3.57 மில்லியன் மாத்திரமே ஒப்பந்ததாரர்களிற்கு செலுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக, இந்த 17 செயற்திட்டங்களும் மீளாய்வாண்டின் இறுதியில் கைவிடப்பட்டதாகக் காணப்பட்டது. | உட்கட்டமைப்பு அமைச்சரவை அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளரின் கடிதத்தின் பிரகாரம் அனைத்து கிராமப்புற வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களும் 2021 திசெம்பர் 15 இற்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் கட்டுநிதி பெறுவனவுகளின் பிரகாரம் ஒப்பந்ததாரர்களுக்கு ரூபா 3.57 மில்லியன் தொகை செலுத்தப்பட்டுள்ளது.<br>கட்டுநிதிகளில் ஏற்பட்ட தாமதம் காரணமாக 2021 திசெம்பர் 15 இற்கு முன்னர் செயற்திட்டங்களை பூர்த்திசெய்ய முடியாதிருந்தது, ஆனால் செயற்திட்டங்கள் பின்னர் பூர்த்தி செய்யப்பட்டன. கட்டுநிதிகள் பெறப்படாததால் கொடுப்பனவு செயன்முறை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டங்கள் சரியாக திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும். |

## 3.6 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 இல் சேருவில பிரதேச செயலகத்தினால் நடாத்தப்பட்ட 8 பெறுகை சந்தர்ப்பங்களின் போது வழங்குநர்களால் வழங்கப்பட்ட விலையின் | மாவட்ட செயலகத்தினால் உரிய பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், பொருட்களை கொள்வனவு செய்யும் போது சந்தையில் | அரசாங்க பெறுகை வழிகாட்டல்கள் பின்பற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செல்லுபடியாகும் காலத்திற்கு அப்பால் மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகள் காரணமாக, முதல் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட விலைகளை விட மேலதிகமாக உரிய வழங்குநர்களுக்கு ரூபா 799,870 தொகை செலுத்தப்பட்டது. | பொருட்களின் விலைகள் வேகமாக அதிகரித்திருந்தன. இதனால், பயனாளிகள் தங்கள் செயற்திட்டங்களை தொடங்க முடியாதிருந்தது. | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகை வழிகாட்டல்களின் 7.12.1 ஆம் பிரிவு செயற்திறனான போட்டி காணப்படவில்லை என்பது தெளிவாகத் தெரிந்தால், பெறப்பட்ட அனைத்து கேள்விகளும் நிராகரிக்கப்படலாம் என்பதுடன் கேள்விகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் போட்டியின்மை தனியாக தீர்மானிக்கப்படக்கூடாது என குறிப்பிடுகிறது. 2022 ஆம் ஆண்டு கந்தளாய் பிரதேச செயலகத்தின் பெறுகையின் போது, ஒரு நிறுவனம் மாத்திரம் விலையை சமர்ப்பித்திருந்த 10 சந்தர்ப்பங்கள் காணப்பட்டதுடன் விலையை சமர்ப்பித்த அதே நிறுவனத்திடமிருந்தே கொள்வனவை மேற்கொண்டிருந்ததுடன் மொத்த பெறுமதி ரூபா 1,098,968 ஆகும். மேலும் பரந்த விளம்பரத்திற்குப் பின்னர் ஒரே ஒரு கேள்வி பெறப்பட்ட போதிலும் சந்தை பெறுமதிகளுடன் ஒப்பிடும் போது கோரப்பட்ட கேள்வி விலை நியாயமானதாக இருந்தால் கேள்வி செயன்முறை செல்லுபடியானதாக கருதப்படலாம் என்பதை பெறுகை வழிகாட்டல்களின் 7.12.2(அ) உட்பிரிவு வழங்குகின்ற போதிலும் சந்தை பெறுமதிகளை ஒப்பிட்டுப் பார்த்து | 2022 ஆம் ஆண்டு பொருளாதார மந்தநிலை காரணமாக, ரூபாவிற்கான-டொலர் விலைவிகிதத்தில் உயர்வு மற்றும் இறக்குமதி கட்டுப்பாடுகள் காரணமாக, பெறுகை நடவடிக்கைகளின் போது பொருட்கள் அல்லது சேவைகளுக்கான விலைகள் கோரப்பட்ட போது ஒன்று அல்லது இரண்டு நிறுவனங்கள் மாத்திரமே விலைகளை சமர்ப்பித்தன. மேலும் 2022 ஆம் ஆண்டில் பெறுகையின் போது தெரிவுசெய்யப்பட்ட வழங்குநர்களிடம் கட்டளைகள் முன்வைக்கப்பட்ட போது கையிருப்பில் இல்லாதமை அல்லது பொருட்கள் கிடைக்காதமை போன்ற வெளிப்படுத்தல்கள் காரணமாக ஒரு சில நிறுவனங்களிடமிருந்து மாத்திரமே பல சந்தர்ப்பங்களில் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தன. நடைமுறையில் உள்ள சூழ்நிலைகளுக்கு ஏற்ப கொள்வனவுகள் உகந்ததாக காணப்படவில்லை என்பதையும், எங்கள் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட வெளிப்புற காரணிகளால் அத்தகைய சூழ்நிலை ஏற்பட்டது என்பதையும் தங்களுக்குத் தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். | அரசாங்க பெறுகை வழிகாட்டல்கள் பின்பற்றப்பட வேண்டும். |

கேள்விதாரர் முடிவு செய்யப்பட்ட தகவல்கள் தொடர்புடைய கோவைகளில் காணப்படவில்லை.

### 3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 342 (1) இன் பிரகாரம் அடியிதழ்சேர் புத்தகங்களை பெறுகின்ற திணைக்களங்கள் அவற்றை பாதுகாப்பாக வைத்திருப்பதற்கும், முறையாகப் பயன்படுத்துவதற்கும் பொறுப்பாக உள்ளன என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் கந்தளாய் பிரதேச செயலகத்தில் AB 70 - இலங்கை அரசாங்க விடுமுறை புகையிரத ஆணைச்சீட்டுக்கள் என்ற அடியிதழ்சேர் புத்தகங்கள் மற்றும் விலங்கு போக்குவரத்து-அட்டவணை 1 இன் 2 அடியிதழ்சேர் புத்தகங்கள் காணாமல் போயிருந்தன. | AB 70 இலங்கை அரசாங்க விடுமுறை புகையிரத ஆணைச்சீட்டு புத்தகம் காணாமல் போனதாக அறிக்கையிடப்பட்டிருந்தது, ஆனால் இந்தப் புத்தகம் இன்னும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. கணக்காய்வு ஐயவினா திகதியில் இந்தப் புத்தகம் பொறுப்பான உத்தியோகத்தரால் கையொப்பமிடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஆனால் அது தற்போது பயன்படுத்தப்பட்டு வருகிறது. அந்த உத்தியோகத்தரின் கையொப்பத்துடன் தொடர்புடைய ஆவணத்தை ஏற்றுக்கொண்டதாக நான் திருத்தியுள்ளேன். 02 கால்நடை போக்குவரத்து அட்டவணை இல. 01 அடியிதழ் சேர் புத்தகங்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளதென அப்போதைய பொறுப்பான உத்தியோகத்தர் அதே பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் நிகழாதிருப்பதற்கு களஞ்சியசாலைக்கு பொறுப்பான உத்தியோகத்தரை பொறுப்பேற்குமாறு தெரிவிக்கப்பட்டது. | நிதிப் பிரமாணம் 342 (1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | அரசாங்கத்தின் நிதியல்லாத சொத்துக்களை முகாமை செய்தல் - அரசாங்கத்திற்கு சொந்தமான வாகனங்களின் பதிவு உரிமைகள் பிரச்சனைகளுக்கான தீர்வு தொடர்பான நிதி அமைச்சின் செயலாளரின் 2018 ஒக்தோபர் 10 | வாகனங்களின் மூலப் பிரதிகள் கிடைக்கும் சந்தர்ப்பங்களில், உரிமை மாற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். இல்லையெனில், வாகனத்தை வைத்திருக்கும் தற்போதைய கம்பனியிடம் மூலப் பதிவு | நிதி அமைச்சின் செயலாளரின் 2018 ஒக்தோபர் 10 ஆம் திகதிய 03/2018 ஆம் இலக்க சுற்றறிக்கையின் |

| | | | |
|---|---|---|---|
| | ஆம் திகதிய 03/2018 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அவர்களுக்குச் சொந்தமில்லாத வாகனங்கள் தொடர்பான வாகனங்களின் பதிவு உரிமைகள் தீர்க்கப்பட வேண்டிய போதிலும் மாவட்டச் செயலகம் மற்றும் 11 பிரதேச செயலகங்களுக்குச் சொந்தமான 56 வாகனங்களின் பதிவு உரிமைகள் இவ்வாறு தீர்க்கப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | பிரதிகள் தங்களிடம் உள்ளது என்பதை உறுதிப்படுத்துமாறு கேட்கப்பட வேண்டும். இவ்வாறு மூலப் பிரதிகளில் சிக்கல்கள் ஏற்படும் பட்சத்தில் 39 பிரதிகளையும் பெற்றுக்கொள்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. அத்துடன், இதுவரை 02 வாகனங்கள், 15 உழவு இயந்திரங்கள் மற்றும் 15 இழுவை வண்டிகளின் உரிமைத்துவம் முறைப்படுத்தப்பட்டுள்ளதுடன், எஞ்சிய வாகனங்களின் உரிமைத்துவம் முறைப்படுத்தலுக்காக கையளிக்கப்பட்ட போதிலும் இதுவரை அது பெறப்பட்டிருக்கவில்லை. | பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | நிதி அமைச்சின் செயலாளரின் 2018 ஒக்தோபர் 10 ஆம் திகதிய 03/2018 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் வாகனங்களின் சட்டபூர்வ உரிமைத்துவம் தொடர்பான சிக்கல்கள் காணப்படும் சந்தர்ப்பங்களில் பழுதடைந்த வாகனங்கள் அல்லது பழைய வாகனங்கள் அகற்றப்பட வேண்டும். சம்பந்தப்பட்ட நிறுவனம் அவ்வாறான வாகனங்களை அப்புறப்படுத்துவதற்கு முன்னர் அதில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளைப் பின்பற்றி பதிவு உரிமைகளைப் பெற வேண்டிய அதே நேரம் வாகனத்தின் பதிவை இரத்து செய்யும் நடவடிக்கையும் செய்ய வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. ஏனெனில் மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் இப்பணியை செயலகங்கள் செய்திருக்காததால் மாவட்ட செயலகத்தால் அப்புறப்படுத்துவதற்கு இனங்காணப்பட்ட 21 மோட்டார் சைக்கிள்களும், மூதூர் பிரதேச செயலகத்தால் அப்புறப்படுத்துவதற்கு இனங்காணப்பட்ட 06 மோட்டார் சைக்கிள்களும் அப்புறப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உரிமை மாற்றல் முறையின் பிரகாரம் பணிகள் பூர்த்தியடைந்தவுடன் குறித்த மோட்டார் சைக்கிள்கள் அப்புறப்படுத்தப்படும் என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். | நிதி அமைச்சின் செயலாளரின் 2018 ஒக்தோபர் 10 ஆம் திகதிய 03/2018 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.8 நட்டங்களும் சேதங்களும்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 110(2) ஒவ்வொரு நிதியாண்டிலும் செலவினத் தலைப்பின் கீழ் ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டத்திற்கும் தனித்தனியாக நட்டங்கள் கூற்றை தயாரிப்பதற்கு கணக்கீட்டு உத்தியோகத்தரை தேவைப்படுத்துகின்ற போதிலும் மாவட்டச் செயலகம் தொடர்பான நிதிக்கூற்றுக்களில் வாகன விபத்துக்கள் தொடர்பாக ஏற்பட்ட ரூபா 4,910,566 கூட்டுமொத்த பெறுமதியான நட்டங்கள் தொடர்பான எந்தத் தகவலும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | மோட்டார் வாகன விபத்து நட்டங்களை பதிவழிப்பது தொடர்பான விபரங்கள் 2022 நிதிக்கூற்றின் 53 ஆம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும், வாகன விபத்துக்கள் தொடர்பான நட்டம் மற்றும் சேதம் பற்றிய முழுமையற்ற அறிக்கைகளின் விபரங்கள் சேர்க்கப்பட்டிருக்கவில்லை என்பதை தங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். | நிதிப்பிரமாணம் 110(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.9 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மாவட்டச் செயலகத்தின் கீழ் உள்ள பிரதேச செயலகப் பகுதியில் வறுமையால் வாடும் மக்கள் தொகை மீளாய்வாண்டில் 31,698 ஆக இருந்த போதிலும் சமுர்த்தி மானிய அறிக்கையின் பிரகாரம் சமுர்த்தியைப் பெற்ற சமுர்த்தி பயனாளிகளின் எண்ணிக்கை 59,023 ஆக இருந்தமை கணக்காய்வின் போது பிரச்சனைக்குரியதாக இருந்தது. எனவே, மீளாய்வாண்டில் சமுர்த்தி நலன்களுக்கு உரித்தில்லாத 27,325 நபர்களுக்கு ரூபா 1,049.7 மில்லியன் வழங்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. | சரியான வருமானத் தகவல்கள் கிடைக்காததால் அல்லது அதிகாரிகளால் தவறவிடப்பட்டதால் உரித்தில்லாத நபர்களும் பயனாளிகளாகலாம். இது தொடர்பில் கவனம் செலுத்துமாறு மாவட்ட அபிவிருத்தி பணிப்பாளர் மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | செலவின அறிக்கைகள் சரியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் பாலைத்தோப்பூர், மூதூர் மேற்கு, தம்பலகமுவ, கந்தளாய் நகரம் மற்றும் பதியாகம சமுர்த்தி வங்கிகளின் மொத்த நிலுவை கடன்கள் ரூபா 214.79 மில்லியன் ஆகும். | மொத்த தொகையில் 51% இதுவரை அறவிடப்பட்டுள்ளது. மீதியாகவுள்ள 49% ஐ அறவிடுவது தொடர்பாக மாவட்ட அபிவிருத்தி பணிப்பாளருடன் கலந்துரையாடி தேவையான நடவடிக்கைகளை எடுப்போம் என்பதை தயவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். | உரிய கடன் தொகையை உடனடியாக அறவிடுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும். |
| (இ) | கிண்ணியா பிரதேச செயலகத்திற்குட்பட்ட 3 சமுர்த்தி வங்கிகளில் காணப்பட்ட ரூபா 177.61 மில்லியன் தொங்கல் கணக்குகளில் மொத்த வரவு மீதியாக இருந்தது. இந்த மீதிக்கு பங்களித்த காரணிகள் தற்போது வரை கண்டறியப்பட்டு சீர்செய்யப்பட்டிருக்கவில்லை. | கிண்ணியா பிரதேச செயலகத்திற்குட்பட்ட 3 சமுர்த்தி வங்கிகளின் தொங்கல் கணக்குகளில் தற்போதுள்ள ரூபா 177.61 மில்லியன் மொத்த வரவு மீதிகள் தொடர்பான உண்மைகளை கண்டறிந்து உடனடி சீராக்கங்களை மேற்கொள்வதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | உரிய சீராக்கங்கள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | தம்பலகமுவ, பதியாகம மற்றும் கந்தளாய் நகரிலுள்ள சமுர்த்தி சேமிப்புக்களைக் கொண்ட 254 பயனாளிகளுக்கு மிக நீண்ட காலமாக சமுர்த்தி வங்கியில் சேமிப்பாக ஒவ்வொன்றும் ரூபா 30,000 இற்கு மேல் அவர்களுக்குச் சொந்தமாக ரூபா 14.33 மில்லியன் மொத்தத் தொகை காணப்பட்ட போதிலும் மாதாந்த சமுர்த்தி மானியங்கள் வழங்கப்பட்டுள்ளன. | சமுர்த்தி பயனாளிகளின் சேமிப்புக் கணக்குகளில் மாதாந்த சமுர்த்தி மானியப் பணமும், சமூகப் பாதுகாப்பு நலன் பணமும் செலவு வைக்கப்படுகிறது, இதனைச் சரிபார்த்த பின்னர் மாதாந்த மானியப் பணம் ரூபா 30,000 இற்கு மேல் அவர்களது கணக்குகளில் உள்ள பயனாளிகளுக்கு மாதாந்த சமுர்த்தி மானியத்தை இடைநிறுத்துவதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | நலன் தேவைப்படுபவர்களுக்கு மாத்திரமே மானியம் வழங்கப்பட வேண்டும். |
| (உ) | 2022 மே 26 ஆம் திகதிய சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் டிஎஸ்டி/எச்ஓ/05/எம்எவ்/01/சுற்றறிக்கை ஆம் இலக்க சுற்றிக்கையின் 5.4 ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு தனிநபரின் சேமிப்புக் கணக்குகளிலும் விசேட உதவிப் பணம் செலவு வைக்கப்பட்ட பின்னர் மீதி இருக்கக்கூடாது. மீதி இருப்பின், பணத்திற்குரிய மக்களை கண்டறிந்து அவர்களின் கணக்கில் செலவு வைக்கப்பட வேண்டும், | சமுர்த்தி வங்கியானது வகை இலக்கம் 4062 இன் கீழ் உலக வங்கி உதவி, ஆசிய அபிவிருத்தி வங்கி உதவியின் கீழ் வழங்கப்படும் மானியப் பணத்தில் மீதியொன்று காணப்பட்டால் பணம் யாருக்கு வழங்கப்பட வேண்டும் என்பதைக் கண்டறிந்து அவர்களது கணக்குகளில் உடனடியாக செலவு வைக்கப்பட வேண்டுமென அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது. | சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் டிஎஸ்டி/எச்ஓ/05/எம்எவ்/01/சுற்றறிக்கை ஆம் இலக்க சுற்றிக்கையின் 5.4 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கிண்ணியா மற்றும் கந்தளாய் பிரதேச செயலகங்களுக்குட்பட்ட சமுர்த்தி வங்கிகள் மீளாய்வாண்டு இறுதி வரை வகை இல. 4062 இன் கீழ் உலக வங்கி உதவி, ஆசிய அபிவிருத்தி வங்கி உதவியின் கீழ் வழங்கப்படும் மானியப் பணத் தொகையில் ரூபா 14.09 மில்லியன் தொகையை பேணியுள்ளன. | | |
| (ஊ) | சமுர்த்தி மானியங்களை அமுல்ப்படுத்துவது தொடர்பான சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2022 மார்ச் 02 ஆம் திகதிய டிஎஸ்டி/எச்ஓ/எஸ்டபிள்யூ/14/19/01 சுற்றறிக்கை ஆம் இலக்க சுற்றிக்கையின் பிரகாரம் 2022 ஏப்ரல் முதல் சமுர்த்தி பயனாளிகளுக்கான கொடுப்பனவுகளில் அதிகரிப்புக்காக நடவடிக்கை எடுத்தல் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும், கிண்ணியா பிரதேச செயலக பிரிவில் உள்ள பயனாளிகளுக்கு சமுர்த்தி மாதாந்த படிகள் புதிதாக வழங்கப்பட்டதுடன் அதன் விளைவாக 2022 ஏப்ரல் மாதத்திற்குப் பின்னரும் 25 பயனாளிகளுக்கு ரூபா 661,000 கூட்டுமொத்த சமுர்த்தி மாதாந்த படிகள் வழங்கப்பட்டு வருகின்றன. | கிண்ணியா பிரதேச செயலகத்தில் சமுர்த்தி மாதாந்த படிகளை பகிர்ந்தளிக்கும் போது சமுர்த்தி மானியங்களை அமுல்ப்படுத்துவது தொடர்பான சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2022 மார்ச் 02 ஆம் திகதிய டிஎஸ்டி/எச்ஓ/எஸ்டபிள்யூ/14/19/01/சுற்றறிக்கை ஆம் இலக்க சுற்றிக்கையை விளங்கிக்கொள்ளாமல் இது மேற்கொள்ளப்பட்டிருந்தது. உரிய முறையில் வழங்கப்பட்டு வந்த நலன்களை இடைநிறுத்தி, உரிய சுற்றறிக்கைகளின் பிரகாரம் தொடருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2022 மார்ச் 02 ஆம் திகதிய டிஎஸ்டி/எச்ஓ/எஸ்டபிள்யூ/14/19/01சுற்றறிக்கை ஆம் இலக்க சுற்றிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | மொறவெவ பிரதேச செயலகத்திற்கு சொந்தமான மூன்று விடுதிகள் குடியிருப்பாளர்களுக்கு முறையாக கையளிக்கப்பட்டிருக்காததுடன் இது தொடர்பான பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் பேணப்படவில்லை. | அரசாங்க விடுதிகள் தொடர்பாக உரிய நடைமுறைகளை பின்பற்றி உரிய அதிகாரிகளிடம் அவற்றை ஒப்படைத்து, கோவைகளை முறையாக பேணுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. | உரிய ஆவணங்கள் முறையாக பேணப்பட வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளுதல்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் குறித்து அதிகாரிகள் போதுமான அளவு அறிந்திருக்காததுடன் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் இனங்காணப்பட்டிருக்காததால் மீளாய்வாண்டில் இலக்குகளின் அடைதல்களை மதிப்பீடு செய்ய முடியவில்லை. | எதிர்கால திட்டங்களை தயாரிக்கும் போது மாவட்டத்தில் நிலைபேறான அபிவிருத்தி முன்னுரிமைகளை இனங்கண்டு செயற்படுத்துவதற்கு மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களிற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் இனங்காணப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும். |

## 5. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு சிரேஷ்ட நிலை உத்தியோகத்தர்களுக்கான 13 வெற்றிடங்கள், மூன்றாம் நிலை உத்தியோகத்தர்களுக்கான 29 வெற்றிடங்கள், இரண்டாம் நிலை உத்தியோகத்தர்களுக்கான 47 வெற்றிடங்கள் மற்றும் ஆரம்ப நிலை உத்தியோகத்தர்களுக்கான 43 வெற்றிடங்கள் உட்பட 132 மொத்த வெற்றிடங்கள் காணப்பட்டன. 09 பிரதேச செயலகங்களில் 70 இரண்டாம் நிலை உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும், மாவட்டச் செயலகத்திலும் 03 பிரதேச செயலகங்களிலும் 25 இரண்டாம் நிலை உத்தியோகத்தர்கள் மேலதிகமாகக் காணப்பட்டனர். இந்த வெற்றிடங்கள் சமப்படுத்தப்பட வேண்டும். | மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகத்தில் உள்ள வெற்றிடங்களை நிரப்புமாறு அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | அத்தியாவசிய பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு உடனடி கவனம் செலுத்தப்பட வேண்டும். மேலும் அவர்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக சேவையாற்றிய உத்தியோகத்தர்களுக்கு இடமாற்ற கொள்கை | உள்ளக இடமாற்றக் கொள்கை தயாரிக்கப்பட்டு பொதுச் சேவை ஆணைக்குழுவினால் முறைப்படி அங்கீகரிக்கப்பட்டு இடமாற்றங்களை | 2001 ஆகஸ்ட் 22 ஆம் திகதிய 18/2001 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை |

| | | |
|---|---|---|
| அமுல்படுத்தப்பட்டிருக்காதமையால் நகரை விட்டு வெகு தொலைவில் உள்ள பிரதேச செயலகங்களில் நீண்டகாலமாக இடமாற்றத்திற்காக காத்திருக்கும் உத்தியோகத்தர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. | அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் இடமாற்றக் கொள்கைக்கு அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் கிடைக்காததால் அமுல்ப்படுத்தல் தடைப்பட்டது. | பின்பற்றப்பட வேண்டும். |